**நிதி ஆதரவுகள்**

**கருவிகளுக்கான கடனுதவி:**

இந்த கருவிகளுக்கான கடனுதவித் திட்டம் புதிய அப்ரெண்டிஸ்கள் (வேலை பழகுபவர்கள்) தாங்கள் பதிவு செய்துள்ள தொழிற் கலைத்துறையில் (trade) செயற்பட தேவையான கருவிகளையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்ய உதவுகிறது.

ஒரு வேலைபழகுபவர் தான் பதிவு செய்யும் தொழிற்கலைத் துறையைப் பொறுத்து உபகரணங்களுக்கும் கருவிகளுக்குமான விலை வேறுபடும் என்பதை இத்திட்டம் அறிந்திருக்கிறது.

ஒவ்வொரு துறைக்கும் பின்வரும் அதி உச்ச கடனுதவி கிடைக்கப் பெறுகிறது:
சேவைத்துறை - $300
கட்டுமானத்துறை - $400
இயந்திரத் தொழில்/உற்பத்தித் துறை - $400
மோட்டார் வலுத் துறை (Motive Power Sector) - $800

இந்தக் கடனுக்கு அப்ரெண்டிஸ்ஷிப் பயிற்சிக் காலத்தின் போதும் பயிற்சி நிறைவேறியதிலிருந்து ஒரு வருட காலம் வரைக்கும் வட்டி அறவிடப்பட மாட்டாது. ஒரு வருட காலப் பகுதியின் பின்பு ப்ரைம் சக 1.5 சதவீதம் என்ற கணக்கில் வட்டி அறவிடப்படும். வேலை பழகுபவர் திட்டத்தைக் கைவிட்டாலோ அல்லது வேலை பழகுபவரின் பதிவு (ரெஜிஸ்ட்ரேஷன்) ரத்து செய்யப்பட்டாலோ, ரத்து செய்யப்பட்ட நாளில் இருந்து 60 நாட்களுக்குள் இந்தக் கடன் ஒன்டாரியோ அரசாங்கத்திற்கு திரும்ப கட்டப்படவேண்டும். 60 நாட்களின் பிறகு ப்ரைம் சக 1.5 சதவீதம் என்ற கணக்கில் வட்டி அறவிடப்படும்.

**யார் பங்குகொள்ள முடியும்?**

கருவிகளுக்கான கடன் உதவி, புதிதாகப் பதிவு செய்யும் வேலைபழகுபவர்களுக்கு கிடைக்கப் பெறுகிறது.

**கருவிகளுக்கான கடனுதவித் திட்டத்தை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

இந்தக் கடன் உதவிக்கு விண்ணப்பம் செய்ய, புதிதாக பதிவு செய்யும் வேலை பழகுபவர் ஒவ்வொருவருக்கும் எல்லாத் தகவல்களும் தானாகவே அனுப்பப்படும். இதில் உள்ள கடன் உதவி உடன்படிக்கையை வேலை பழகுபவர் பூர்த்தி செய்து அதை தரப்படுகின்ற தபால் உறையில், பயிற்சிகளும், கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தொடர்பான அமைச்சு (Ministry of Training, Colleges and Universities) என்ற இடத்திற்கு திரும்ப அனுப்பவேண்டும்.

கையொப்பமிடப்பட்ட கடனுதவி உடன்படிக்கையை பெற்றதிலிருந்து 60 நாட்களுக்குள் அமைச்சு பதில் அளிக்கும்.

**மேலதிக தகவல்களுக்கு:**

தொடர்பு கொள்ளுங்கள்: ஒன்டாரியோ பயிற்சிகளும், கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தொடர்பான அமைச்சு கருவிகளுக்கான கடனுதவித் திட்டம் (Ontario Ministry of Training, Colleges and Universities Loans for Tools Program) இலவச இலக்கம் 1-800-313-1746.

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X